DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **STC.No.107/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அருண்குமார் ( சார்பு ஆய்வாளர்) (P.w.4) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of March 2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது திருச்சுழி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.வீரணன் என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் திரு.வீரணன் கடந்த 12.03.2024ம் தேதியன்று நிலையபொறுப்பில் இருந்தபோது, காளிமுருகன் (வயது 42) த/பெ.மதுரைவீரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.78/2024, இதச பிரிவு 294(b)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி முதல் தகவல் அறிக்கை

மற்றும் புகார்மனு ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களை கனம் நீதித்துறை நடுவருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2.பின்னர் சம்பவ சாட்சிகள் காளிமுத்து, சுப்புராஜ், பழனி, வீரணன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து குவிமுச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 12.03.2024ம் தேதியன்று நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க இருநபர் ஜாமீன்தாரர்கள் மூலம் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

3. இவ்வழக்கின் சட்டப்பிரிவு 294(பி) மட்டுமே என்பதால் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வழக்கிற்கு அவசியமில்லை என தயார் செய்யவில்லை. பின்னர் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் தனது புலன் விசாரணையை அன்றைய தினமே முடித்து எதிரி மீது இதச பிரிவு 294(b)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எ.த.கு.வி**

சார்பு ஆய்வாளர் சொன்ன நாள், நேரத்தில் புகார்மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.